அதிகார போதையால் அநீதி புரிந்தனர் ஆட்சியாளர்!

Phone No 4502
விலை அரை அணா
Regd. No.M. 5458
இலங்கை 5 சதம்

மாலை மணி

ஆசிரியர்: C.N. அண்ணதுரை M.A. MALAI MANI
(திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ்)

மலர் 1] சென்னை (7—2—50) ✠ வெளியீடு (8—2—50) [இதழ் 162

$2\frac{1}{2}$ ஆண்டு ஆட்சியில் மக்கள் கண்டது ஏமாற்றமே!

மாற்றுக்கட்சியினரை மட்டந்தட்டுவதே ஆட்சியாளர் நோக்கம்

சுதந்தரதின விழாவில் கண்ட மகிழ்ச்சி குடியரசு விழாவில் குன்றிப்போனதேன்?

காசா சுப்பராவ் கடாவுகிறார்!

"காங்கிரஸ் பதவி வகித்து வந்த கடந்த இரண்டரை ஆண்டுகளில், நிர்வாகம் சீர்கேடடைந்திருக்கிறது என்பதை யாரும் மறுக்க முடியாது. அந்நிய ஆட்சி அகன்றதும் நல்லகாலம் பிறக்கும் என்று ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருந்த மக்களின் ஆசையில் மண் விழுந்துவிட்டது. எங்கும் ஏமாற்றமே காட்சியளிக்கிறது. சுதந்திர தினக்கொண்டாட்டத்தில் காணப்பட்ட எல்லையில்லா உற்சாகம் குடியரசு தினவிழாவில் காணப்படவில்லை. இதற்குக் காரணமென்ன? இதனை நாட்டு நலத்தில் அக்கரையுள்ளவர்கள் ஆராய்ந்து பார்க்க வேண்டுவது அவசியம்.

காங்கிரஸ் தலைவர்களில் ஒரு சிலர் நீங்கலாக பெரும்பாலோர் அதிகார போதையினால் தமது ஒழுக்கத்தையே இழந்துவிட்டனர். அதிகார மோகமானது காங்கிரஸ் ஸ்தாபனத்தின் சாபக்கேடு. தங்களது கோஷ்டியைச் சேராதவர்களை அதிகாரத்திலுள்ளவர்கள் நசுக்குகின்றனர். சமீபத்தில் பார்லிமெண்டுக்கு அபேட்சகர்கள் பொறுக்கியெடுக்கப்பட்டதானது, சில தலைவர்கள் பொதுமக்களின் அபிப்ராயத்தை அலட்சியம் செய்கிறார்கள் என்பதற்கு தக்கதோர் சான்றாகும். சட்டப்படி சட்ட மன்றமே முழு வலிமையும் பெற்றதாகும். சட்ட மன்றம் நல்லதாயிருந்தால் ஆட்சி நல்லதாக இருக்கும். எனவே சட்ட மன்றத்துக்குச் சரியான உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பது அவசியம். சிறிய அரசியல் ஊழியர் பதவிகளுக்குக்கூட தகுதி முறைகள் இருக்கும்போது, சட்ட மன்றங்களில் தகுதி முறைகளே கவனிக்கப்படாதது வருந்தத் தக்க விஷயமே"

அண்மையில் சென்னையில் அகில இந்தியக் குடியரசுக் கட்சியினர் அளித்த தேநீர் விருந்து உபசாரத்துக்குப் பதிலளிக்கையில் தோழர் காசா சுப்பராவ் வெளியிட்ட கருத்துக்கள் தாம் மேலே எடுத்துக் காட்டப்பட்டுள்ளவை.

"எப்பொழுது பார்த்தாலும் காங்கிரசையும், காங்கிரஸ் ஆட்சியாளரையும் குறை கூறுவதே இவர்கள் வேலை"

பரந்த மனப்பான்மை என்பதே இல்லாதவர்கள்; குறுகிய மனப்பான்மையினர், கோணல் புத்தியினர்"

என்றெல்லாம், நம்மை இழிக்கும் பழித்தும் பேசும் காங்கிரஸ் அன்பர்களுக்கும், ஆட்சியாளருக்கும் தோழர் காசா சுப்பராவின் மேற்கண்ட உரைகளை அப்படியே அர்ப்பணம் செய்ய விழைகிறோம்.

"அந்நிய ஆட்சி அகன்றால் நல்ல காலம் பிறக்கும் என்று மக்கள் எண்ணியிருந்த எண்ணத்தில் மண்ணை போட்டவர் காங்கிரஸ் ஆட்சியாளர்" என்பது போன்ற கண்டனக் கணையை வீச மற்றுங் கசித் தோழர்கள்கூட தயங்குவர். ஆனால் அப்படிப்பட்ட கணைகள் பலவற்றை காசா கைக்கூசாமல் தொடுக்கிறார்.

காங்கிரஸ் ஆட்சியில் இரண்டரை ஆண்டுகளில் நிர்வாக சீர்கேடுற்றது என்பதை யாரும் மறுக்க முடியாது என்று அறுதியிட்டுக் கூறுகிறார் அவர்.

அத்துடன் நின்றாரா? இல்லை; சுதந்திர தினவிழாவையும், குடியரசு தினவிழாவையும் ஒப்பிட்டுக் காட்டி, முன்னது ஆனந்த விழா, பின்னது அவலக் கூத்து என்று எடுத்துக் காட்டுகிறார். இடித்துக் காட்டுவது மட்டுமின்றி நாட்டின் நலம் நாடும் நல்லறிவாளர்கள் இந்நிலைமை பற்றி ஆராய்ந்து பார்க்க வேண்டுவது அவசியம் என்றும் அறிவுறுத்துகிறாரெனில் காங்கிரஸ் கரைந்து விட்டது— கரைந்து கொண்டிருக்கிறது என்பதற்கு இதைவிட வேறு எடுத்துக் காட்டு என்ன தேவை?

அடுத்து, தோழர் காசா சுப்பராவ் ஆட்சியாளர்களின் எதேச்சாதிகாரம், ஒழுங்கீனம் ஆகியவற்றைச் சுட்டிக்காட்டியிருப்பதும் கவனிக்கத்தக்கது. அதிகார போதையால் ஆட்சியாளர் மாற்றுக் கட்சியினரை நசுக்கச் செய்யும் முயற்சி நாடறிந்த உண்மை. அதனை காசா இன்று எழுதத் துணிந்திருக்கிறாராகச் சுட்டிக் காட்டியிருப்பது பாராட்டத்தக்கதே.

காங்கிரசின் அதிகார

(தொடர்ச்சி 2-ம் பக்கம் பார்க்க)

நாடு நலம்பெற நல்லறிவாளர் தேவை

முதியோர் கல்வி வளர அறிவுப்பணி பரவவேண்டும்

முதியோர் கல்வி பற்றிய ஆய்வுரை

"வாக்காளர்களே, இனி நமது எஜமானர்கள். கல்வி அறிவு பெற்ற வாக்காளர்களின்றி ஜனநாயகம் வெற்றி பெறாது. அறியாமையினாலே அலட்சியத்தினாலோ வாக்காளர் தமது வாக்குரிமையைத் தவறாக உபயோகப்படுத்தினால் குடியரசு குலைய நேரிடும். ஆதலின் முதியோர்க்குக் கல்வி புகட்டுவது எதிர்காலத்தில் மகத்தான ஓர் பொறுப்பாகும்"

என்று சென்னை கவர்னர் பவநகர் மகாராஜா சென்னையில் முதியோர் கல்வி வாரத்தை ஆரம்பித்துப் பேசியபோது குறிப்பிட்டார்

ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்கு இன்றியமையாது வேண்டப்படுவது அந்நாட்டு மக்களின் கல்வி அறிவே யாகும். இந்த உண்மை இதுகாறும் எழுத்தளவோடும், பேச்சளவோடுமே இருந்து வந்திருக்கிறதேயன்றி செயலளவில் வந்ததில்லை. ஆனால் இன்றைய நிலையில் அதனைச் செயலளவில் செய்து காட்டவேண்டிய அவசியம் ஏற்பட்டுவிட்டது. வயது வந்தோர்க்கெல்லாம் ஓட்டுரிமை வழங்கப்பட்டு, அந்த ஓட்டுகள் மூலமே அரசியல் நடைபெறவேண்டிய அளவுக்கு நாடு ஜனநாயகத்தில் முன்னேறிவிட்டது இன்று. எனவே சென்னை கவர்னர் குறிப்பிட்டதுபோல் வாக்காளர்களே எஜமானர்களாவர். இந்த எஜமானர்கள் கல்வி அறிவு பெறாவிட்டால், வாக்குரிமையைச் சரிவர பயன்படுத்த முடியாது. அறியாமையை அகற்றி, ஜனநாயகத்தை நிலைநாட்ட வேண்டிய வாக்காளர் கல்வி, அறிவு பெறாவிடில் அறியாமையை வளர்க்க, ஜனநாயகத்தைச் சிதைக்கப் பயன்படும் கருவிகளாகிவிடுவர். ஆகவே, அரசியலார் முதியோர் கல்வி விஷயத்தில் அதிக அக்கரை செலுத்த வேண்டும். முதியோர் கல்வியைப் பரப்புவதென்றால், அதற்கென பள்ளிகள் அமைத்துப் பணியாற்றுதல்தான், முதியோர் கல்வி என்று நினைப்பது தவறு. நாடு, நகர், பட்டி தொட்டிகளெங்கும் நல்லறிவாளரைக் கொண்டு அவ்வப்போது அறிவுப் பிரசாரம் செய்யும்படி செய்ய வேண்டும். அதுவே மக்களை அறிவுடையோராகச் செய்யும்; எட்டறிவு பெறாவிடினும் கேள்வி அறிவால் மக்கள் அறிவு பண்படக்கூடும். அத்தகைய மக்கள் தமது வாக்குரிமையைப் பயன்படுத்தினால், அதனால் நாடு நலம்பெறும். ஜனநாயகம் வளரும் என்பதில் ஐயமில்லை.

போலீஸ் ஆயுதசாலையில் தளவாடங்கள் திருட்டு

உகர்த்தா போலீஸ் ஆயுதசாலையிலிருந்து 183 ஆயுதங்கள் தளவாடங்கள் ... காணாமல் போனதாகத் தெரியவந்திருக்கிறது. இது சம்பந்தமாக ஒருவர் கைது செய்யப்பட்டிருக்கிறார்.

ஹைட்ரோஜன் குண்டு; 1860 லேயே ரஷ்யா கண்டுபிடித்துவிட்டது?

லண்டன், பிப். 6—

மிகவும் வீரியமுள்ள ஜலவாயு (ஹைட்ரோஜன்) குண்டை ரஷ்ய விஞ்ஞானி ஒருவர் 1860 லேயே கண்டுபிடித்துவிட்டதாக எவினிங் பத்திரிகை 'எக்ஸ்பிரஸ்' ஸில் ஒரு செய்தி பிரசுரிக்கப்பட்டிருக்கிறது.

இரண்டாவது ஜார் அலெக்ஸாண்டர் மன்னரிடம் இந்த ஜலவாயு குண்டு அப்பொழுது சமர்ப்பிக்கப்பட்டதென்றும், அவர் அதை ஏற்க மறுத்துவிட்டார் என்றும், மன்னரை ஒழிக்க இதை ஒரு சாதனமாக உபயோகிக்க ரஷ்ய விஞ்ஞானிகள் முயன்றனரென்கிற தகவல்களை ஸ்டாலின் நியமித்துள்ள கமிஷன் கண்டுபிடித்திருப்பதாக, வார்ஸா கம்யூனிஸ்டுகள் நம்புகின்றனர் என்று அச்செய்தி கூறுகிறது.

கம்யூனிஸ்டு பெட்ரோல் ஸ்டாக், தீக்கிரை

ஜோகஹார், பிப். 6—

பிரிட்டிஷ் எல்லைக்கு அருகாமையிலிருந்த கம்யூனிஸ்ட் பெட்ரோல் ஸ்டாக்மீது தேசிய சீன விமானங்கள் குண்டுகளை வீசியதால் 50,000 காலன் பெட்ரோல் தீப்பிடித்தது. நீண்டநேரம் எரிந்ததென்றும் பக்கத்திலுள்ள ... ஸ்டாக்குகளிலும் பற்றிக்கொண்டனவென்றும், காண்டனிலிருந்து வரும் ரயில்மீதும் குண்டு வீழ்ந்ததால் சிறிது சேதம் ஏற்பட்டிருக்கிறதென்றும் கூறப்படுகிறது. இப்பெரும் சேதத்தால் ஹைனான் மீது படையெடுக்க கம்யூனிஸ்டுகளின் போட்ட திட்டம் பாதிக்கப்படலாம் என்று தெரியவருகிறது.

பிரிட்டிஷ் மந்திரி சபைக் கூட்டம்

தெ. கி. ஆசியாவில் கம்யூனிஸ்டு ஆபத்துபற்றி பெவின் அறிக்கை விடுப்பார்

லண்டன், பிப். 6 —

பிரிட்டிஷ் மந்திரி சபைக் கூட்டம் செவ்வாய்க்கிழமை நடைபெறவிருக்கிறதென்றும், அதில் அயல்நாட்டு மந்திரி தோழர் பெவின் தென்கிழக்கு ஆசியாவில் ஏற்பட்டுள்ள கம்யூனிஸ்டு ஆபத்து குறித்து ரிப்போர்ட் சமர்ப்பிப்பார் என்றும் தெரிகிறது.

இந்தோ சீனாவில் ஹோசிமின் சர்க்காரை ரஷ்யா அங்கீகரித்ததால் ஏற்பட்டுள்ள நிலைமையைக் குறித்தும் மந்திரி சபை விவாதிக்கும்.

அடுத்த வார மத்தியில் பாவ்டே சர்க்காரை, பிரிட்டன் அங்கீகரித்துவிடும் என்றும், பிரிட்டனுடன் சேர்ந்தார் போலவோ அல்லது சில நாட்கள் கழித்தோ தோ யுனைடெட் ஸ்டேட்ஸ் பாவ்டே சர்க்காரை அங்கீகரித்துவிடும் என்றும் விஷயமறிந்த வட்டாரங்களில் கூறப்படுகிறது.

மாலை மணி

சென்னை 7—2—50 செவ்வாய்க்கிழமை

மருந்தறியா மருத்துவர்!

"நமக்கென்று பொதுவான அரசியலொன்று ஏற்பட்டு விட்டதாலோ, ஓர் டொமினியனில் வாழ்வதாலோ நாம் ஒற்றுமைப்பட்டைந்து விட்டோமென்று கூறிக் கொள்ள முடியாது. கலாசாரத் துறையிலும், சமையிலும் கவின் கலைகளிலும் இன்னும் மற்ற மற்றத் துறைகளிலும் நாம் ஒருவரை யொருவர் புரிந்து கொள்ளாத பட்சத்தில், உண்மையான ஒற்றுமை ஏற்பட முடியாது."

சுதந்தர சுயராஜ்ய சர்க்காரின் தேசீய மந்திரி சபையின் காங்கிரஸ் அமைச்சர் தோழர் பி. கோபாலரெட்டியவர்கள் இக் கசப்பான உண்மையை மறைக்க முடியாமல் விண்டு விட்டார் சென்னைக் கூட்டமொன்றில் கோகலே மன்றத்தில் தட்சிண பாரத இந்துஸ்தானி பிரசார சபை ஆதரவில் நடைபெற்ற கூட்டத்தைத் துவக்கி வைத்தத் தோழர் கோபாலர்; இந்தியின் அவசியத்தை எப்படி எப்படியோ எடுத்துக் கூறி, இறுதியாக இப்பொடி வைத்தப் பேச்சினையும் மடிக்கத் தயங்கவில்லை! தோழர் கோபாலரவர்களின் இச்சிறு சொற்றொடரில் பற்பல பொருள்கள் பொதிந்து கிடக்கின்றன அவருக்குத் தெரிந்தோ தெரியாமலோ. தெரிந்தேதான் குறிப்பிட்டாரெனின், அவரது துணிவுக்கும் தீரத்துக்கும் நம் பாராட்டு! தெரியாமல், பேச்சுவாக்கில் விட்டுவிட்டாரெனின், காலப் போக்குக்கும் கருத்து வளர்ச்சிக்கும் தன்னை அர்ப்பணித்துக்கொண்டார்; இதை இப்படித் தன்னையறியாமலே சொல்லித் தீர வேண்டிய கட்டாய நிலைக்கு வந்துவிட்டாரென்பது கண்டு மகிழ்கிறோம்.

இந்தியா என்று இன்று வழங்கப்பெறும் இம்மாபெரும் துணைக் கண்டம், என்றுமே ஒரு தனியாட்சிக்குட்பட்ட பெருநாடாக இருந்ததில்லையென்பதையும் வரலாறு தெரிந்தகால முதற்கொண்டு, இன்றைய துணைக்கண்டம் ஒன்றுக்கு மேற்பட்ட பல ஆட்சி நிர்வாகங்களின் கீழ் பல பகுதிகளாகவே பிரிந்திருந்ததென்பதையும், இரு பெரு கலாசாரங்கள் ஈண்டு ஒன்றோடொன்று முரணி, பெருத்த அளவில் முரணி வந்திருக்கின்றன வென்பதையும், அக்பரும் அவுரங்கசீப்பும், அசோகரும், ஹர்ஷனுங்கூட இம் முரணிய கலாசாரங்களை இணைக்கவும், வடநாடு தென்னாட்டை ஒரு குடைக் கீழ்க் கொணரவும் நினைத்த நினைப்புகள்; எடுத்த முயற்சிகள் பயன்தரவில்லையென்பதையும் நாம் கூறவிட்டாலும்; ஆதிக்கக்காரர் மறைத்தாலும், சரித்திர ஏடுகள் சான்றுகள் பலவுடன் தெள்ளிதின் எடுத்தோதுகின்றன. அதிகார பலத்தைக்கொண்டு இருவேறு நாகரிகங்களை — வேறுபட்ட நாகரிகங்களை, கலாசாரங்களை, அவற்றைக் கொண்டொழுகும் மக்களை, அம் மக்கள் வதியும் நிலப் பரப்புகளை இணைத்துவிட முடியுமென நினைத்த 'ஏக சக்ராதிபதிகள்' எத்தனையோபேர் தோல்வியுற்றிருக்கின்றனர் தம் முயற்சிகளில். மிகமிகப் பிற்பட்ட காலத்தில் பிரிட்டிஷார் இப்பெரு நிலப்பரப்பனைத்தையும் வியாபாரத் துறையில் தம் மாதிக்கத்தினுள் கைவரப் பெற்றுக்கொண்ட பின்னரோ, அதையொட்டி ஆட்சியதிகாரத்தையும் கவர்ந்துகொண்ட பின்னரே, தங்களுடைய நிர்வாக வசதிகளை முன்னிட்டு, இப்பழம்பெருந் தென்னாட்டை வடநாட்டோடு இணைத்து முடிச்சுப்போட்டு, இவ்வண்ணம் வந்துற்ற பெருநிலப்பரப்பைப் பல்வேறு மாகாணங்களாக வகுத்துக் கொண்டு, அம் மாகாணங்களனைத்தினுடைய கடிவாளத்தையும் மத்திய ஆட்சியென்ற பெயரால் வடகோடியில் ஓரிடத்தில் இறுகப்பிடித்துவைத்துக்கொண்டு விரும்பாத மக்கள் மீது, வேண்டாத யதேச்சாதிகாரம் தொடங்கலாயிற்று அவ் ஏகாதிபத்திய யதேச்சாதிகார ஆட்சியின் தொடர்ச்சியாகவே இந்தியசுயராஜ்ய ஆட்சியும், அதனையடுத்து இன்றைய குடியரசுத்துநாடகமும் ஆரம்பமாகியுள்ளது. இந்த நிலையில் அமைச்சர் கோபாலரின் 'அர்த்த புஷ்டி'யான கருத்துரை எத்துணை பொருத்தமும் தகுதியும் மிக்கது என்பதை நாம் எடுத்துக்காட்ட வேண்டியதில்லை.

அமைச்சர் கோபாலர் நோயைத் தான் சரிவரக்கண்டு பிடித்தார்—நோய்பற்றிய விளக்கத்தையும் தந்துரைத்தார், அதற்கு மட்டுமே தான் நம் பாராட்டு. ஆனால் நோயின் காரணத்தையோ, அந்நோயைப் போக்குவதற்கான சரியான, மருத்துவத்தையோ காட்டவில்லை கோபாலர். 'நோய் நாடி நோய் முதல் நாடி அதன் வாய் நாடி வாய்ப்பச் செயல்' என்றார் வள்ளுவர். நம் அமைச்சர் நோய் நாடினார்; ஆனால் நோய் முதலையோ அதன் வாயையோ, வாய்ப்பச் செய்யக் கூடிய சரியான காரியம் என்னவென்பதையோ தெளிவுறக் கண்டாரில்லை அல்லது சொல்ல முன்வரவில்லை.

நோயைக் கண்டுபிடித்துவிட்ட மருத்துவர்,-தன்னிடம் தக்க மருத்துவ வசதி இல்லாவிடில்-வேறு யாரிடமேனும் அனுப்பியிருக்கலாம் நோயாளியை மருத்துவம் பார்த்துக் கொள்ள. அதைச் செய்யவில்லை அமைச்சர் கோபாலர். உபகண்ட மக்களனைவரும் இந்தியைக் கட்டாயமாகப் பயில்வாரேயாகில், அவர்கள் உள்ளபடியே ஒரு அரசியலுக்கு உரியவராவர், ஒரு டொமினியனில் ஒரு நாட்டவராக வாழ வருங்கதையுடையவரென உபதேசிக்கிறார்.

'நாம் இந்தியர் எனக் கூறிக்கொள்கிறோம். வட இந்தியாவிலுள்ளோர் பற்றி நாம் எதுவுமே தெரியாமலிருக்கிறோம். அவர்கள்மொழியை நாம் தெரிந்துகொள்ளாமலிருந்தால், வடநாடு செல்லுங்கால், அவர்களுடன் தாராளமாய்ப் பேசக்கூட முடியாதுபோய்விடும். எனவே நாம் இந்தியோடு, இன்னொரு வட இந்திய மொழியினையும் கற்றுக் கொள்ளவேண்டும்.''

இப்படி எடுத்துக் கூறுகிறார் அமைச்சர். அவரது கூற்றில் உண்மை முனைப்பைவிட முரண்பாட்டுச் சேர்க்கையே பெரிதும் கலந்து நிற்கிறது! வெவ்வேறு கலாசாரம், நாகரிகம், பண்பியல்பு, பழக்க வழக்கமுடை மக்களினத்தவர்களை பொது மொழி யென்ப தொன்றினை வலுக்கட்டாயப் புகுத்தி, ஒன்றுசேர்த்து ஒரு குடைக்கீழ் கொண்டுவந்துவிட இயலுமா? பல்வேறு நாகரிகப் பண்பாடுடையோர் அப்படிப் பொதுமொழி யொன்றினால் பிணிப்புண்டு, ஒரு ஆட்சியின் கீழ் சுமுகமாய் இருந்த மக்கள், இருப்பதற்கு வரலாற்றுச் சான்றுகளை வகையுடன் தந்துரைக்கமுடியுமா நம் அமைச்சர்? பொது மக்களனைவருக்கும் புரியக்கூடிய அவர்கள் விரும்பி வரவேற்கக்கூடிய அவர்களது கலை, பண்பியல்புகளுக்கு ஒவ்வக்கூடிய ஒரு மொழிதானே பொது மொழியாக இருக்கமுடியும்? எல்லா வகையிலும் ஒத்த மனப்போக்குடை, ஏற்றத்தாழ்வுகளை ஒருமித்துக் கூறுபோட்டுக் கொள்ளக்கூடிய, மொழி இனக்கலாச்சாரங்களில்பெரிதும் ஒற்றுமையுடைய மக்கள்கூட்டமொன்றுக்குப்பொதுவான அரசியல் வகுப்பதா, அன்றி எல்லாம் வகுத்ததே வாய்க்கால் என்ற தோரணையில் எப்படியோயாரலோ வீசியெறிந்து கைவரப் பெற்ற ஆட்சியதிகார பலத்தைக் கொண்டு, பொதுவான அரசியலென்பதாக ஒன்றை சிருஷ்டித்துக்கொண்டு, அவ்வரசியலுக்கேற்ப மக்களைப் பொதுமைப்படுத்த (?) அவர்களிடையே ஒற்றுமையேற்படுத்த (?) பொருந்தாத-ஒவ்வாத பலாத்காரச் செயல்களில் ஈடுபடுவதா? தலைக்கேற்பத் தொப்பி வாங்குவதா? அன்றி, தொப்பிக் கேற்பத் தலையைச் சீவி யெறிந்து விடுவதா? அமைச்சர் கோபாலர் நல்ல மருத்துவர்தான்! ஆனால் மருந்தறியா மருத்துவர்! இல்லாத ஊருக்குப் போகாத பாதையைக் காட்டுகிறார். இனம், கலை, நாகரிகம் இன்ன பிறவற்றால் மாறுபட்டுக் காணப்படும் மக்கள் கூட்டங்களை 'பிளாஸ்திரி' போட்டு ஒட்டப் பார்ப்பதால் பயனில்லை; இயற்கை வழியில் இரு வேறு உட்டார வாசிகளாக ஆக முயற்சிப்பதே, அறிவும், பொறுப்பும் நிறைந்த செயலாகும்.

தோழர் அண்ணாத்துரை

சென்னை, பிப். 5—

பெரியாருடைய அண்ணனார் ஈ. வே. கிருஷ்ணசாமி அவர்கள் காலமான செய்தி அறிந்தகும் திருவள்ளுவர் விழா, திருமணம் ஆகியவைகளில் கலந்து கொள்வதற்காக சென்னை வந்திருந்த தோழர் சி. என். அண்ணாத்துரை நேற்று நள்ளிரவு ஒரு மணிக்கு, காரில் ஈரோடு புறப்பட்டுச் சென்றார்.

ஈ. வெ. கி. சவ அடக்கம் முடிந்தவுடன் ஈரோட்டிலிருந்து கோவை சென்று விமான மூலம் சென்னைக்கு வர முயன்றும் குறித்த நேரத்தில் விமான நிலையம் அடைய முடியாமற் போன காரணத்தால் சென்னை புரசை திருவள்ளுவர் விழாவில் கலந்து கொள்ள முடியாமற் போயிற்று என்பதைத் தோழர்களுக்குத் வருத்தத்துடன்தெரிவிக்க விரும்புகிறோம்.

கேப்டவுன்வட்டமேஜை மாநாடு

இந்தியா, பாகிஸ்தான் புது யோசனைகளை வெளியிடும்

டர்பன், பிப். 6—

கேப்டவுனில் இந்தியா, பாகிஸ்தான், தென்னாப்பிரிக்கா மூன்று நாடுகளும் கலந்துகொள்ளும் வட்டமேஜை பூர்வாங்க மாநாடு எதிர்பார்த்ததைவிட, நல்ல நம்பிக்கையுடனேயே ஆரம்பமாகும் என்று இங்கு கருதப்படுகிறது.

எவ்வளவோ தடங்கல்களும் முட்டுக்கட்டைகளும் ஏற்படும் என்பது நிச்சயமானாலும், தென்னாப்பிரிக்க மந்திரி லாவர் கொழும்பு மாநாட்டில் இந்தியா, பாகிஸ்தான் பிரதிநிதிகளைக் கலந்து பேசியிருப்பதின் விளைவாக மாநாடு வெற்றியில் முடியலாம் என்ற நம்பிக்கை இருந்து வருகிறது.

இம்மாநாட்டில் இரு பெரும் பிரச்னைகள் பேசித் தீர்க்கப்படவிருக்கின்றன:—

(1) இந்தியர்களைத் தென்னாப்பிரிக்காவிலிருந்து வெளியேற்றும் மலான் சர்க்கார் கொள்கை.

(2) தென்னாப்பிரிக்காவுடன் இந்திய வர்த்தக பகிஷ்காரம்.

இந்தியாவும், பாகிஸ்தானும் தகராறு தீர புது யோசனைகளை வெளியிடலாம் என்று தெரிகிறது. இவ்விரண்டு நாடுகளும் தென்னாப்பிரிக்காவிலுள்ள இந்திய பாகிஸ்தானிகளுக்குப் பாதுகாப்புகளும், உரிமைகளையும் அளித்தேயாக வேண்டும் என்று வற்புறுத்தும் எனத் தெரிகிறது.

பாகிஸ்தானின் ஏற்பாடு நற்பலன் விளைக்கும்

வர்த்தக பகிஷ்காரத்தை எடுத்து விடுவதென்று பாகிஸ்தான் முடிவு செய்திருப்பதுபற்றி தென்னாப்பிரிக்க சர்க்கார் அதிகாரி ஒருவர் அபிப்பிராயம் கூற மறுத்துவிட்டார். ஆனால் பாகிஸ்தான் செய்துள்ள இம்முடிவு வட்டமேஜை மாநாட்டிற்கான நல்லெண்ணம் கும் நிலைமை ஏற்படுத்தும் என்று தெரிகிறது.

அறிவுக் கதிர்!

ஜனநாயகவாதி என்று ஒருவரைச் சொல்ல வேண்டுமானால், அவர் மற்ற மனிதர்களுடன் வாழ்வதெப்படி என்பதை அறிந்தவராயிருத்தல் வேண்டும். வெறும் மனிதக் கூட்டுறவைக் கொண்டு மாத்திரம் ஜனநாயகவாதி என்று யாரையும் சொல்லிவிடமுடியாது.

— மேரி. பி போலர்

இரங்கல்

வைத்திய வள்ளல், பெருந்தகை ஈ. வெ. கிருஷ்ணசாமி அவர்கள் இயற்கை யெய்தியமை கேட்டு ஆறாதுயரத்திலாழ்ந்த எங்கள் தோழர் ஈ. வெ.கி. சம்பத் அவர்களுக்கும், அவருடைய குடும்பத்தாருக்கும் எங்களுடைய இரங்குதலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

'மாலை மணி'
அலுவலகப் பணியாளர்கள்

சர்ச்சிலின் முன்னேற்பாடு!

தனது மந்திரிசபை பட்டியலும் தயார்!

லண்டன், பிப். 6—

பிரிட்டிஷ் பொதுத் தேர்தலில் கன்சர்வேடிவ்களுக்குத்தான் வெற்றி நிச்சயம் என்ற உறுதியின் பேரில் தோழர் சர்ச்சில் தன் மந்திரிசபை பட்டியலையே தயாரித்து விட்டார் என்று சொல்லப்படுகிறது. ஆனால் அந்தப் பட்டியலைப் பற்றிய விவரங்கள் எதுவும் தெரியவில்லை. அந்தப் பட்டியலில் யார் யார் இருக்கக்கூடும் என்ற ஹேஷ்யங்கள் கிளம்பியிருக்கின்றன.

ஈடன், சிச்சர்ட், ஆன்டென், பட்லர், ஹொரால்ட், மாக்மில்லன், ஆலிவர் ஸ்டான்லி ஆகியோர் சர்ச்சில் மந்திரிசபை அமைத்தால் அதில் கட்டாயம் இடம் பெறுவார் என்று கூறப்படுகிறது.

இப்பொழுது மாரிஸன் வகித்து வரும் லார்ட் பிரஸிடென்ட் பதவியை ஈடன் ஏற்கலாம் என்றும், சர்ச்சில் முதிர்ந்த வயது காரணமாக விலகும்பட்சத்தில் அவருடைய வாரிசாக ஈடன் பிரதமர் பதவிக்கு வரலாம் என்றும் கூறப்படுகிறது.

அரபுகளுக்கு ஆயுத உதவி

லேக்ஸக்ஸஸ், பிப். 6—

அரபுகளுக்கும் ஐரோப்பிய நாட்டினருக்கும் யுனைடெட் ஸ்டேட்ஸ் ஆயுத உதவி அனுப்புவதை எதிர்த்து இந்தப் பத்திரிகைகள் தீவிரமாக எதிர்த்து எழுத ஆரம்பித்திருக்கின்றன வென்று ரூட்டர் நிருபர் கூறுகிறார். — ரூட்டர்

அதிகார...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

போதை, காசா கட்டிக்காட்டும் பொல்லாங்குகளை மட்டுமட்டுமின்றி மேலும் பல இன்னல்களை விளைத்துள்ளது. அவை ஏட்டில் அடங்காதவை; நினைத்தால் நெஞ்சு பதறும். இத்தகைய நிலையிலேதான் குடியரசு மலர்ந்திருக்கிறது! மக்களாட்சி என்ற பெயரில் மக்களுடைய சிந்தனைக்கு, செயலுக்கு, பேச்சுக்கு, எழுத்துக்கு, புதிய பொன் விலங்குப் பூட்டப்பட்டிருக்கிறது. இத்தகைய பொன் விலங்கைத் தகர்த்துப் பொடிப் பொடியாக்கவேண்டுமானால், காசாக்கள் கண்டனக் கணைகள் வீசினால் மட்டும் போதாது. ஜனநாயகத்தில் நாட்டமுடைய முற்போக்குக் கட்சிகளோடு ஒத்துழைத்து, அந்தப் பொல்லாத பொன் விலங்கை உடைத்தெறிய முன்வரவேண்டும்.

"நாட்டு நலத்தில் அக்கறையுடையோர் ஆராயவேண்டும்" என்று கூறிய காசா சுப்பராவுக்கு நாம் தரும் பதில் இதுவே.

இந்திய அரசியல் திட்டமும் ஒரு மனு நீதியே!

எவர்க்கும் அடிபணியா திராவிடத்தை வடவர் சுரண்டுவதா?

வட நாடு வாழ, தென்னாடு தேய்வதா?

கோவை மாநாட்டில் ப. உ. சண்முகம் ஆற்றிய தலைமை உரை

[29—1—50-ல் கணியூரில் நடைபெற்ற கோவை மாவட்ட திராவிட முன்னேற்றக் கழக மாநாட்டிற்குத் தலைமைவகித்த திருவண்ணாமலைத் தோழர் ப. உ. சண்முகம் அவர்கள் ஆற்றிய தலைமையுரையின் சுருக்கம் கீழே தரப்பட்டுள்ளது]

தோழர் சண்முகம் தம் சொற்பொழிவின் ஆரம்பத்தில் கணியூர் பஞ்சாயத்து போர்டாரால் தமக்களிக்கப்பட்ட வரவேற்பிற்கு நன்றி தெரிவிக்குமுகத்தான் சிறிது நேரம் பேசினார்.

தோழர்களே! தாய்மார்களே!!

“திருவண்ணாமலை என்றதும் யாவருக்கும் அதனுடைய ஸ்தல புராணமும் மகிமையும் ஞாபகம் வரும். அதுமட்டுமல்ல; அங்குள்ள ரமண ரிஷியைப் பற்றியும் ஞாபகம் வரலாம். ஆம் அவரைப் பற்றிய ஞாபகம் அவசியம் வரத்தான் செய்யும். ஏன், அவர் அவ்வளவு பிரபலமாக பிரமாதமாக விளம்பரப்படுத்தப்பட்டிருக்கிறார், பத்திரிகை முதலியவற்றால். அவர் பெருமை, மகத்துவம் மிகப் பிரமாதமாகப் பேசப்படுகிறது. ஆனால் அவர் நிலை இன்று என்ன? படுத்த படுக்கை; ஆம் அவருக்கு நோய், பகவான் ரமணருக்கு, ரமண ரிஷிக்குத் தான் நோய்; பயங்கர நோய், பாவாத்மாக்களுக்குக் கூட வரக்கூடாத பயங்கரமான நோய், சென்னை சுந்தரவதனம் டாக்டரின் கண்காணிப்பில் உயிர் பிழைக்க உபாயங்கள் செய்யப்படுகிறது. எங்கள் ஊர் விசேடம் இதுதான்.

கனக விசயர் கல்லறைகள் பேசினவே......?

கோவை மாவட்ட மாநாடு இங்கு நடைபெறுகிறது இன்று. பல்லாயிரவர் கூடியுள்ளோம். இது மிக முக்கியமானதொரு சமயத்தில் கூடியுள்ளது. அதாவது ஜனவரி 26-ந் தேதியிலிருந்து இந்திய குடியரசுப் பிரகடனம் அமுலுக்கு வந்துள்ள நேரம் இத்தகைய நேரத்திலே நாம் கூடியுள்ளோம். அரசியல் நிர்ணய சபை செய்த தீர்ப்பு ஆட்சிசர்க்கார் தந்த. இடைக்கால மந்திரிசபையினர் காலத்தில் ஏற்பட்ட சபையின் சட்டம்! இன்று இமயம் முதல் குமரிவரை ஒரே ஆட்சி! கோலாகலம். இதை எண்ணும்பொழுது என் மனக்கண்முன் கனக விசயரின் கல்லறை தோன்றுகிறது. ஆம், அன்று தமிழரைத் தாழ்த்திப்பேசினர் என்பதற்காகச் சேரன் செங்குட்டுவனால் தோற்கடிக்கப்பட்டுக் கல்சுமந்த அதே கனகவிசயன் கல்லறைகள் தாம் காட்சியளிக்கின்றன. நினைவுக்கண் முன் நின்று நர்த்தனமாடுகின்றனர். அக்கல்லறைகள் கேலி பேசுகின்றன “ஏ, தமிழா! உன் தன்மானம், வீரம், தீரம், யாவும் எங்கே? அன்று எம் தலையில் கல்சுமக்க வைத்ததைப் பற்றி வானளாவப் புகழ்கிறாய், பேசுகிறாயே! பார் இன்று பாருமுழுதும் பவனி வருகின்றன? குமரி முனையிலே எமது பரம்பரையினரின் கொடி பறக்கிறதே!” என்று எக்காளமிடுவதாகத் தெரிகிறது. உண்மையிலேயே நிலைமை அப்படித்தானே. “கல் சுமக்க வைத்தான் அன்று ஆனால் இன்று தாள் பிடித்து மட்டுமல்ல, காவடி தூக்கிக் கைகட்டி வாய்பொத்தி நிற்குமளவுக்கு எமது அதிகாரம்” என்று தானே கூறும். அக்கல்லறைகள்.

குடியரசுக் கோலாகலம்!

இந்த அரசியல் திட்டத்தை குடியரசுப் பிரகடன திட்டத்தை கையெழுத்திட இரண்டு அ. ஸி. சபை அங்கத்தினர்களே மறுத்துள்ளனர். சீக்கியர், சரத் சந்திர போஸின் பார்வார்டு கட்சியினர் ஜனநாயகக் கட்சியினர், கம்யூனிஸ்டுக் கட்சியினர், திராவிடர் கழகத்தினர், மற்றும் திராவிட முன்னேற்றக் கழகத்தவராகிய நாமும் விரும்பவில்லை. பூரணத்துவம் பெற்றதாகக் கொள்ளவில்லை. மக்கள் விருப்பத்தைப் பூர்த்தி செய்யும் எனக் கொள்ளவில்லை என்று திட்டமாகத் தெரிவித்துள்ளனர். நாட்டிலே எஞ்சியுள்ள இந்துமகா சபையும் இதை எதிர்க்கது. சமீபத்தில்தான் சென்னையிலிருந்து வெளிவரும் இந்துமகாசபை பத்திரிகையொன்றைப் படித்தேன். காங்கிரசு சொல்லும்போது எப்படி எதிர்ப்பது என்ற பல்லவி பாடியுள்ளது.

மனு நீதியே!

இன்று ஏற்பட்டுள்ள சர்க்கார் மக்களின் பிரதிநிதித்துவம் பெற்றதா? அரசியல் நிர்ணய சபையோ, ஆங்கில ஆதிக்கத்தின் கீழ் ஏற்பட்ட ஏற்பாட்டால் ஏற்பட்ட சட்டசபைகளிலிருந்து இடைக்கால சர்க்காரால், அதுவும் ஆங்கிலேயராலேதான் ஏற்படுத்தப்பட்டது. அதன் மூலம் தயாரிக்கப்பட்டதொன்றாகும் இதைத் தயாரித்த டாக்டர் அம்பேத்காரைக் கலியுக மனு என்று ஒருவர் புகழ்கிறார். என்ன வேடிக்கை!

ஆனால் ஒரு விதத்தில் இது உண்மைதான். இது மனுநீதிதான், நீதி நேர்மையற்றது. ஜனாதிபதி தேர்தல், முதலில் வயதுவந்த மக்கள் அத்தனை பேருக்கும் ஓட்டுரிமை வழங்கப்பட்டு, அவர்களால் தேர்ந்தெடுக்கப்படவேண்டும் என்றிருந்தது. பின்னர் அதுமாறி, மாற்றப்பட்டு, சட்டசபை அங்கத்தினர்கள் மட்டும் தேர்ந்தெடுத்தால் போதும் என்றாகிவிட்டது. வடக்கே மறுப்பு ஏற்பட்டுவிட்டது. சமீபத்தில் நடைபெற்ற பட்டாபி சீதாராமையா, டாக்டர் புருஷோத்தம்தாஸ் தாண்டன் ஆகியவரின் காங்கிரஸ் தலைமைப் போட்டியின் முடிவு அவர்கட்கு நல்லதொரு பாடமாக, ஆனால் எச்சரிக்கையாக அமைந்துவிட்டதுபோலும்.

ஜனாதிபதியா சர்வாதிகாரியா?

இன்றைய அரசியல் சட்டக்கை, ரிக் வேதத்தின் மொழி பெயர்ப்பு என்று யாரோ ஒரு மூர்த்தி ‘இந்து’ பத்திரிகையின் குடியரசு மலரில் எழுதியுள்ளார் அவர்களுக்குப் புன்சிரிப்பு, பூரிப்பு அப்படி? ரஷ்யாவிலே அரசியல் திட்டம் தயாரிக்க 5 மாதங்கள் 12 பேர்கொண்டதொரு சமிதிகள் வேலைசெய்து தயாரிக்க. பின்னர் அதனை மக்களுக்கெல்லாம் ஒலிபெருக்கி மூலமும், சினிமா, நாடக மூலமும், பொதுக் கூட்டங்கள் மூலமும், பத்திரிகைகள், புத்தகங்கள், துண்டுப்பிரசுரங்கள் மூலமும் விளம்பரப்படுத்தி விளக்கங்கள் கொடுத்து மக்களின் எண்ணங்களை, திருத்தங்களை கேட்டனர் கேட்டுப் பிறகு மக்கள் சம்மதம் பெற்று அதனை அமுல் நடத்தினர். அங்கு கூட இங்கு ஜனாதிபதிக்குத்தரப்படுவது போன்ற விரிவான அதிகாரம் கிடையாது.

செக்கும் சிவலிங்கமும்!

இங்கு மாகாணங்களின் நிலை என்ன? ஒரு சாதாரண ஜில்லா கலெக்டருக்கும் குறைவான அதிகாரங்கள் தாம் தரப்பட்டுள்ளன அதுமட்டுமா? ஜனாதிபதி நினைத்தால் மாகாண மந்திரி சபையைக் கலைக்கலாம். ட்ரூமனுக்கு இல்லாத அதிகாரம், ஸ்டாலினுக்குத் தரப்படாத அதிகாரம்!

இவ்வளவும் எதற்கு? தென்னாடு, திராவிடநாடு வடநாட்டுக்கு மார்க்கட்டாக, அவர்களது பிடியிலேயே இருக்கத்தானே! இலங்கை போன்ற நாடுகள் தனித்தியங்கும்போது நம்மால் முடியாதா? பாகிஸ்தானின் தனிப் பிரிவுப் பிரச்சினை பேசப்படாத முன் எழுந்த நமது கிளர்ச்சி, சுர்ணேவின் சொற்கள் கேட்கப்படா முன்னம் தோன்றிய நமது குறிக்கோள், இன்றும் பூர்த்தியாகவில்லை? ஏன்? எதனால்? இங்கு விபூஷணர்களும் அநுமார்களும் உள்ளனர். கண் தெரியாது, கருத்தறியாது பேசிடும் அண்ணாமலைப் பிள்ளைகளும், காமராஜர்களும், சுப்பையாக்களும் உள்ளனர். தோழர் சுப்பையா சமீபத்தில் நமக்கெல்லாம் செக்கும் சிவலிங்கத்திற்கும் வித்தியாசம் தெரியாது என்று கூறிய செய்தி சுதேசமித்திரன் பத்திரிகையில் பார்த்தேன். அவருக்குப் புரியவைக்கிறேன்.

இதோ, செக்கு சாதாரண மரம் அதில் சாதாரண மனிதன், சாதாரண மாடுகளைக் கட்டி ஓட்டி எண்ணெய் ஆட்டுகிறான். சிவலிங்கம் ஆரியத்தினால் ஏற்படுத்தப்பட்டு, இவர் போன்ற மக்களையே மாடுகளாகக் கட்டி ஆரியம் எண்ணெய் ஆட்டுகிறது. இது தான் இரண்டுக்கும் உள்ள வித்தியாசம். நாங்களறிந்ததைத் தெரிந்துகொள்ளட்டும் தோழர் சுப்பையா அவர்கள். நாம் கூறுவது அத்தனையும் அதிகார ஆசையாலல்ல, ஆட்சியின்பால் நாங்கள் கொண்டுள்ள காதலுமல்ல. ஆனால் அறிவுரைதான்; ஆளட்டும் நன்றாக என்ற நல்லெண்ணத்தோடு.

காந்தியார் சொன்னதென்ன?

ஒரு நாட்டை இன்னொரு நாடு அடிமைப்படுத்தி ஆளும் காலம் மலையேறி விட்டது. அது இனி நடவாது. வேண்டுமானால் வியாபார ஒப்பந்தங்கள் மூலம், வாணிபக் கொள்ளை மூலம், ஒரு நாட்டை இன்னொரு நாடு கொள்ளையடிக்கலாம், ஆதிக்கஞ்செலுத்தலாம். நமது நாடு,—திராவிட நாடு—எவருக்கும் அடிமைப்பட்டதல்ல. அசோகன், கலிங்கம் தந்த பாடத்தோடு நின்றான். அக்பர்கூட அடியெடுத்து வைக்காத நாடு ஆனால் எப்படியோ, ஆங்கிலேயனால் ஒரே இந்தியாவோடு சேர்த்து ஆளப்பட்டது என்ற ஒரே காரணத்தால் இன்னும் சேர்ந்து வாழவேண்டுமென்பது பொருந்தாது. பர்மா பிரிவினை ஏற்பட்ட அன்று காந்தியார் தமது யங் இந்தியா (Young India) பத்திரிகையில் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார். அதாவது “சுதந்திர இந்தியா”. இனி, இனம், மொழி, கலாச்சாரம் முதலியவற்றால் வேறுபட்ட எந்தப் பகுதியும் தனித்து சுதந்திர நாடாக வாழ்வதைத் தடுக்காது” என்று எழுதியுள்ளார். அதைத்தான் இன்று வற்புறுத்துகிறோம்.

சில நாட்களுக்கு முன் சென்னைவந்த இந்திய பார்லிமெண்ட் தலைவர் தோழர் மவ்லங்கர் அவர்கள், ‘வடநாட்டார் தென்னாட்டின் மேல் ஆதிக்கம்செலுத்தவில்லை. அப்படிசொல்வதுசரியல்ல’ என்று பேசியிருக்கிறார். இது உண்மையா? யோசித்துப் பாருங்கள் இந்தியாவில் தங்கம் தோண்டியெடுக்கப்படுவது கோலாரில் மட்டுந்தான். ஆனால் அதன் விலை நிர்ணயிக்கப்படுவது பம்பாயில்தானே! யார் மறுக்க முடியும்? மைசூரைத் தவிர மற்ற இரும்பு ஆலைகள் எல்லாம் வடக்கேதானே! மில்கள் ஆதிக்கம் எங்கே? அங்கேதானே? மறுக்க முடியுமா?

ஓமந்தூராரின் உள்ளக்கிடக்கை!

வெள்ளைக்காரன் இந்நாட்டை ஆண்டான்! வரி உருவினான். ஆனாலும் அதை நாட்டைச் சீர்திருத்தியும் சென்றுவிட்டான். இருப்புப் பாதை, தபால், தந்தி, பாலம், பள்ளி, ஆஸ்பத்திரி பாதைகள் ஆகியவற்றை உண்டாக்கினான். போர்க்காலத்தில் நம்மிடமிருந்து பெற்ற தொகையை ஸ்டார்லிங் கடனாக்கித் திருப்பித்தருவதாகக் கூறுகிறான் ஆனால் அவன் கொள்ளையடித்தது வேறு வழியில்-அதாவது அவனது நாட்டு வாணிபத்துக்கு, உற்பத்திச் சரக்குகளுக்கு, இந்த நாட்டை நல்லதொரு மார்க்கட்டாக, விற்பனைச் சந்தையாகக் கொண்டான். அதுபோலவேதான் இன்று வடநாடு வாணிபம் மூலம், பொருளாதாரம் மூலம் நம்மை ஆதிக்கம் செலுத்துகிறது. அதனை விலக்கவேண்டும் என்று கூறுகிறோம். இதனைச் சில நேர்மையுள்ள காங்கிரஸ்காரர்களும் உணர்கிறார்கள் அவர்களில் முன்னாள் முதல் மந்திரி தோழர் ஓ. பி. இராமசாமி ரெட்டியாரும் ஒருவராவார். அவர் ஆட்சிக்காலத்தில் தென்னாட்டில் ஒரு சர்க்கரை ஆலை, திருவண்ணாமலையில் ஏற்படுத்த அனுமதியளித்து ஒரு உத்தரவு பிறப்பித்துள்ளார். அதில் அவர் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார். அதாவது, அந்த சர்க்கரை ஆலைக்குத் தேவையான மூலதனத்தில் நூற்றுக்கு அறுபத்தைந்து பங்கு (65%) தென்னாட்டிலேயே வசூலாக வேண்டும் என்று. இல்லையேல் ஒரே நாளில் வடவர் அதன் பங்குகள் அனைத்தையும் பெறுவர் அல்லவா?

“பிராம்மண சங்கம்” பிறந்ததேன்?

அடுத்து நாம் சமுதாயச் சீரழிவைப் போக்கி “ஒன்றே குலம் ஒருவனே தேவன்” என்ற பண்பாட்டை உண்டாக்கப் பாடுபட்டு வருகிறோம். எனவே பார்ப்பனர்கள் எம்மைக்கண்டு நடுங்கவேண்டாம். எம்மோடு கலந்து வாழுங்கள், நீங்களும் எம்மைப்போல் மனிதர்களாக என்று தான் புத்திமதி சொல்கிறேன். இந்து பத்திரிகையின் குடியரசு மலரில் சேலம் கிருஷ்ணய்யர் என்பவர் பிராம்மண சங்கம் ஏன் ஏற்பட்டது என்று விளக்கியிருக்கிறார். அதில் அவர் கூறுகிறார்: நாட்டில் திராவிடர், திராவிடநாடு, என்னும் பார்ப்பனரல்லாதார் உணர்ச்சி பெருகிவிட்டது. அதன் ஆபத்தினின்றும் பிராம்மணர்களைக் காப்பாற்ற அவர்களுக்கு உணர்ச்சியும் எழுச்சியும் ஊட்டவேதான் என்று, இதுவல்ல முறை, எம்முடன் மனிதராக மனிதத் தன்மையுடன் வாழவேண்டும் என்பதுதான் எமது எச்சரிக்கை என்று கூறுகிறேன்!”

மேலும் பற்பல விஷயங்களைப் பற்றிக் குறிப்பிட்டுவிட்டு, மீண்டும் அவரைத் தலைவராகத் தேர்ந்தெடுத்த மாநாட்டுக் குழுவினருக்கும், வரவேற்பளித்த கணியூர் பஞ்சாயத்து போர்டாருக்கும், மாநாட்டு மக்களுக்கும் தமது நன்றியைத் தெரிவித்துவிட்டுத் தமது தலைமை உரையை முடித்தார். (க. நி.)

தேவை!

நமது “மாலை மணி”யை விற்பனை செய்வதற்கு, கீழ்கண்ட இடங்களுக்கு முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் தேவை.

திருவாரூர்
கும்பகோணம்
காரைக்கால்
தஞ்சை
மாயூரம்
நெல்லிக்குப்பம்,
சீர்காழி
பண்ணுருட்டி

நிர்வாகி, ‘மாலைமணி’

நாட்டு நடப்பு

:(0):

வள்ளுவர் வாலிபர் கழகம்

வெள்ளூர், ஜன. 20—

வெள்ளூர், ஸ்ரீராமபுரத்தில் வள்ளுவர் வாலிபர் கழகம் ஒன்று நிறுவப்பட்டு 14—1—50 சனி மாலை செயற்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது. எம். சுப்பிரமணி (தலைவர்) செ. முனிரத்தினம் (செயலாளர்) வி. எல். முனிரத்தினம் துணைச் செயலாளர் எம். இராமசந்திரன் விளம்பர உறுப்பினர் பி. பரமசிவம் நிதி உறுப்பினர் எம். கிருஷ்ணமூர்த்தி புத்தக சாலையாளர், ஜி. ராஜு சுமி என். பி. இராமசாமி ஜி அண்ணாமலை வி. கன்னியப்பன், டி. பி. கண்ணன், பா. குப்புசாமி, சின்னசாமி எம். அப்பாதுரை சி. கண்ணன் மற்றும் 15—1—50 காலை 10 மணிக்கு டி. வி. கோவிந்தராச முதலியார் அவர்கள் தலைமையில் செ. முனிரத்தினம் முன் மொழிய பெரியார்கள் (வெள்ளூர்) தி. மு. கழகத்தின் துணைசெயலாளர் மு. சி. வேணு பின் மொழிய நகரசபை கௌன்சிலர் வி. ஆர். ஏ புடு அவர்களால் துவக்கப்பட்டு கூட்டம் 12 30 மணிக்கு இனிது முடிந்தது.

* * *

மதுரை மாவட்டத் தமிழாசிரியர்கள் மாநாடு

சோமனை, ஜன. 30—

23 1 50 இரவு பெரியகுளம் மீ. க. இளமுருகனார் இல்லத்தில் தேவாரம் நாராயணசாமி செட்டியார் தலைமையில் தமிழாசிரியர்கள் கூட்டம் ஒன்று கூடியது. தமிழாசிரியர்கள் குறைகள் பற்றியும் தமிழ் முதன் மொழி என்ற அரசினர் கூறியது ஏட்டளவில் இருப்பது பற்றியும், அதற்குக் காரணம் தமிழாசிரியர்கள் ஒற்றுமையாக இல்லாத முறையேயென்றும் பலர் எடுத்துக் காட்டிப் பேசினார்கள். அக்குறைகளை நீக்க மதுரை மாவட்டத் தமிழாசிரியர்கள் மாநாடு ஒன்று அண்மையில் கூட்ட வேண்டுமென்றும் தீர்மானிக்கலாயிற்று. அமைப்புக் குழுச் செயலாளர்களாக கோம்பை க. சண்முகசுந்தரம் அவர்களும் விருதாசர் திருமாறன் அவர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். புள்ளி விபரங்கள் சேகரிக்க பெரியகுளம், கொடைக்கானல் தாலுகாக்களுக்கு தேனி தமிழாசிரியர் தி. இ. சுந்தரமூர்த்தியவர்களும் திண்டுக்கல், பழனி மேலூர், மதுரை தாலுகாக்களுக்கு திண்டுக்கல் இளங்கண்ணனாரவர்களும் திருமங்கலம் தாலுகாவிற்கு திருமங்கலம் நாகலிங்கம் அவர்களும் நிலக்கோட்டை தாலுகாவிற்கு சுப்பையா, வத்தலக்குண்டு அவர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். மாவட்டத்திலுள்ள தமிழாசிரியர்கள் அனைவரும் தங்கள் பெயரும் வேலை பார்க்கும் பள்ளிக்கூடம், முதலிய போன்ற விபரங்களுடன் கோம்பை க. சண்முகசுந்தரம், தலைவர் மதுரை மாவட்டத் தமிழ்த் தொண்டர் கழகம் கோம்பை என்ற முகவரிக்கு எழுதுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

* * *

வ. உ. சி. நூல் நிலையத் திறப்பு விழா

குருவிக்காரம்பை, ஜன. 26—

19-1-50 வியாழக்கிழமை மாலை 5 மணிக்கு குருவிக்காரம்பை வ. உ. சி. நூல் நிலையம் துவக்க விழா நடைபெற்றது. கல்வயல் போராளி ஆலங்காடி (பஞ்சாயத்து தலைவர்) தோழர் பெரியண்ணன் அவர்கள் தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

தோழர் பெரியண்ணன் அவர்கள் வ. உ. சி. சிதம்பரம் பிள்ளை அவர்கள் வரலாறு பற்றியும் நூல் நிலையமென்னும் பொருள் பற்றி பேசி நிலையத்தைத் திறந்து வைத்தார். பின்பு குருவிக்காரம்பை இராமத்

தாரால் நூல் நிலையத்தின் சார்பாக ஒரு நன்றி சாட்டுமடல் படித்து அளிக்கப்பட்டது. பிறகு நூல் நிலையத்தின் சார்பில் அரசர்மடம் தோழர். ஆர். கணேசரத்தினம் அவர்களின் இன்னிசைக் குழுவுடன் ஒரு இன்னிசை அரங்கேற்று நிகழ்ச்சி நடைபெற்றது. அதுசமயம் வ. உ. சி. நூல் நிலையத்தின் சார்பாக தோழர் கணேச ரத்தினத்திற்கு ஒருமெடல் அன்பளிப்பாக அளிக்கப்பட்டது.

23-1-50 மேற்படி நிலையத்திற்கு நிர்வாகக் குழுவினர்கள் தேர்ந்தெடுப்பதற்காக மாலை 5 மணிக்கு தோழர் எஸ் வி. இராமசாமி தலைமையில் கூட்டம் கூடி கீழ்கண்ட நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டது.

* * *

கோம்பை தமிழ் இல்ல நான்காவது ஆண்டு விழா

கோம்பை, ஜன. 22—

கோம்பை தமிழ் இல்லத்தின் நான்காவது ஆண்டு விழா திருச்சி தமிழர்நாடு ஆசிரியர். தமிழறிஞர் கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள் தலைமையில் வெகு சிறப்பாக நடைபெற்றது. இல்லத் தலைவர் க. சண்முகசுந்தரம் ஆண்டு அறிக்கை வாசித்தார். கோம்பை செ. பசுபதி, ரா. மா. பொன்னுசாமி இருவரும் விழாச் செலவு முழுவதையும் ஏற்றுக்கொண்டார்கள்.

தோழர் விசுவநாதம் பேசும் பொழுது குறிப்பிட்டதாவது:— சாதி, மத, அரசியல் கட்சிகள் ஆகிய இவற்றால் தமிழர்கள் ஒற்றுமை இல்லாமல் இருக்கின்றனர். இந்நிலை தமிழர்கள் ஒன்றுபடுவதற்கு வழி ஒன்றுதான் உண்டு. அதுதான் தமிழ்மொழியாகும். இத்தமிழைப் படித்து இதனை வளர்ச்சியுறச் செய்வதன்மூலம் தமிழர்கள் ஒற்றுமையடையலாம். தமிழிலுள்ள திருக்குறள் மூலம்தான் தமிழர்கள் இன்னார் என்பதை உலகம் தெரிந்து கொண்டது. திருக்குறள் என்ற நூலை திருவள்ளுவனார் அருளிச் செய்யாமலிருந்தால் தமிழ் என்று ஒரு மொழியிருக்கிறதென்றும், தமிழர்கள் என்ற ஒரு இனம் இருக்கிறதென்றும், தமிழ் நாடு என்று ஒரு நாடு இருக்கிறதென்றும் உலகத்தார் அறிந்திருக்கவே முடியாது. அத்தகைய நமது தமிழ் நாட்டிலே பெருமை மிக்குள்ள நமது தமிழ் மொழியைப் படிக்காமல் விடுப்பது வருந்தத்தக்கதே. திருக்குறள் கற்பது எல்லோர்க்கும் உரிய படிப்பாகவும் முழு மனிதனாகமாட்டான் தோழர் எஸ். என். மரைக்காயர் நன்றி கூற கூட்டம் இனிது கலைந்தது.

* * *

சூளூர் சொற்பயிற்சிக் கழகம்

22—1—50 இரவு 8 30 மணிக்கு சொற்பயிற்சிக் கழகக் கட்டிடத்தில் உயர்தர பாடசாலை ஆசிரியர் தோழர் ஜெயராஜ் தலைமையில் "மேல் நாடும் கீழ் நாடும்" என்பதைப்பற்றி சொற்பொழிவு நடைபெற்றது. தலைவரும் மற்ற அங்கத்தினர்களும் பேசிய பின் செயலாளர் சி. எச். அருணாசலம் நன்றி கூற கூட்டம் முடிவுற்றது.

அமெரிக்க சிறுவர்களுக்கு மோட்டார் ஓட்ட பயிற்சி

நியூயார்க், பிப். 5—

யுனைடெட் ஸ்டேட்ஸில் செகண்டரி பள்ளிக்கூடங்களில் மாணவர்களுக்கு மோட்டார் ஓட்ட கற்பிக்கப்பட்டு வருகிறது.

43 ஸ்டேட்டுகளில் 6191 பள்ளிகளில் 81,000 மாணவர்களுக்குச் சென்ற ஆண்டு மோட்டார் ஓட்ட கற்றுக் கொடுக்கப்பட்டதாம்.

தி. மு. கழகக் கூட்டங்கள்

8—2—50

அய்யம்பேட்டை:—	இரா. நெடுஞ்செழியன்,
வாடிப்பட்டி:— (மாலை)	சி. என். அண்ணாத்துரை, என். ஜீவரத்தினம், என். வி. நடராசன், ஈ. வெ. கி. சம்பத்.
நிலக்கோட்டை:—(இரவு)	சி. என். அண்ணாத்துரை என். ஜீவரத்தினம், என். வி. நடராசன், ஈ. வி. கே. சம்பத். இ. காத்தான்.

9—2—50

பட்டிவீரன்பட்டி:—(மாலை)	சி. என். அண்ணாத்துரை, என் ஜீவரத்தினம், என். வி. நடராசன், ஈ. வெ. கி. சம்பத்.
திண்டுக்கல்:—(இரவு)	சி. என். அண்ணாத்துரை, என். ஜீவரத்தினம், என். வி. நடராசன், ஈ. வெ. கி. சம்பத்

10—2—50

மதுராந்தகம்:—	சி. பி. சிற்றரசு, காஞ்சி. கல்யாணசுந்தரம்.
(மதுரை மாவட்டம்) கூடலூர் கம்பம் தேனி	சி. என், அண்ணாத்துரை என். வி. நடராசன், என். ஜீவரத்தினம், ஈ வி கே. சம்பத்,

"குடியரசின்" படையெடுப்பு

"காந்தியார் சாந்தி அடைய"

மூசிறி பிப். 3—

இவ்வூர் சப்டிவிஷனல் மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டில் "காந்தியார் சாந்தி அடைய?" என்ற நூல் முசிறி, அச்சிட்டு, வெளியிட்டதாக முறையே தோழர்கள் ஏ. வி. பி. ஆசைத்தம்பி, பெரியண்ணன், டி. வி. கலியபெருமாள் ஆகியோர் மீது சர்க்காரால் தொடரப்பட்ட வழக்கு மூதன் முறையாக இன்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. பிராசிகூஷன் தரப்பிற்கு திருச்சி ஜில்லா கலெக்டர் மெஜஸ்டிரில் குமஸ்தா வெங்கடேசன் ஆஜரானார். முதல் எதிரி தோழர் ஆசைத்தம்பி, தான் எதுவும் விசாரணை செய்யவில்லையென கூறியபின், 2, 3-வது எதிரிகளின் சார்பாக முறையே அறையூர் வழக்கறிஞர் எம். ஆர். ராஜகோபாலும் அட்வகேட் பி. ரெங்கசாமியும் தோழர் வெங்கடேசனைக் குறுக்கு விசாரணை செய்தபின் வழக்கு 14-ந்தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. (ஈ-சி)

* * *

"அழியட்டுமே திராவிடம்"

மூசிறி, பிப். 3—

இவ்வூர் சப்டிவிஷனல் மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டில் "அழியட்டுமே திராவிடம்" என்ற நூலை அச்சிட்டு வெளியிட்டதற்காக தோழர்கள் பெரியண்ணன், டி. கே. தங்கவேலு ஆகியோர் மீது சர்க்காரால் தொடரப்பட்ட வழக்கில், பிராசிகூஷன் தரப்பில் ஆஜரான தோழர் வெங்கடேசனை மேற்படி தோழர்களின் சார்பாக துறையூர் அட்வகேட் பி. ரங்கசாமியும், வழக்கறிஞர் எம். ஆர். இராசகோபாலும் குறுக்கு விசாரணை செய்தபின் வழக்கு 14-தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. (ஈ-சி)

"கருஞ்சட்டை ஒழியட்டுமா"

சென்னை, பிப். 6—

"கருஞ்சட்டை ஒழியவேண்டுமா" என்ற நூலின் ஆசிரியர் புலவர் தோழர் விழுமி அழகர்சாமி, வெளியிட்டவரான தோழர் திருநாவுக்கரசு, அச்சிட்டவரான தோழர் எஸ். என் மூர்த்தி ஆகியோர் மீதும் இன்று காலை 12-மணிக்கு, அரசாங்கத்தார் சென்னை பிரதம மாகாண மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டில் வழக்குத் தொடுத்தனர். வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு மார்ச் 11-ந் தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. மூவரும் ஜாமீனில் வெளிவந்தனர். (ஈ-சி)

இனி நடப்பவை

நிலக்கோட்டை:—இவ்வூர் தி. மு. க. கிளையின் சார்பில் 8 2 50 புதன்மாலை 7-மணிக்கு ஓர் பொதுக் கூட்டம் நடைபெறும். தோழர் இ. காத்தான் தலைமை வகிப்பார். தோழர்கள் சி. என். அண்ணாத்துரை, ஈ. வி. கே. சம்பத், என். வி. நடராசன், என். ஜீவரத்தினம் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

* * *

மதுராந்தகம்:—இவ்வூர் தி. மு. க. கிளையின் சார்பில் 10-1-5 வெள்ளி மாலை 5-மணிக்கு ஓர் பொதுக்கூட்டம் நடைபெறும். அதுபோது தோழர்கள் சி. பி. சிற்றரசு, காஞ்சி. கல்யாணசுந்தரம் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

* * *

காரைக்குடி:—தோழர் கண்ணதாசன்—தோழியர் பொன்னழகி திருமணம், 9-2-50 வியாழன் காலை 8-மணியளவில், முத்துப்பட்டினம் காலாவது தெரு 5 என்னுள்ள இல்லத்தில் நடைபெறும். தோழர் நாராயணசாமி கண்ணன் தலைமை வகிப்பார். தோழர்கள் மு. கருணாநிதி, முருகு சுப்பிரமணியம், மீ. சு. இளமுருகனார், அரங்கண்ணல், கலைபுரி சோமசுந்தரன் ஆகியோர் பேசுவர். அன்று மாலை "திருமணம்" என்ற தலைப்பில் ஓர் "கவி அரங்கம்" நடைபெறும்.

அறிவிப்பு

ரெஜினா மூட்டைப் பவுடர், மூட்டைப்பூச்சி, எறும்பு முதலிய வைகளை நாசமாக்கி, அயர்ந்த நித்திரை தருகிறது சாம்பிள் டின் 1-க்கு 8 அணா ஸ்டாம்பு அனுப்பவும் G. பழனியப்பமுதலியார், மதுரை.

நெல் அறைக்கப் புதிய முறை

நெல் அறைக்கும் முறையை அபிவிருத்தி செய்வதன் மூலம் சென்னை மாகாணத்தில் சுமார் 2 லட்சம் டன் அரிசி அதிகப்படியாகக் கிடைக்குமென்று கூறப்படுகிறது. இம்முறை சென்னைக்கு வந்திருக்கும், மத்திய உணவு மந்திரி காரியாலயத்தின் விசேஷ ஆலோசகரான தோழர் எஸ். வ மா, இந்த மாகாணத்தின் செல் வீழ்வும் விரதேசங்கள் பலவற்றில் இதைக் கண்கூடாகச் செய்து காட்டி வருகிறார். ஜனவரி 31-ந் தேதி தஞ்சாவூரில், இந்த முறையைப் பரீட்சார்த்தமாகச் செய்து காட்டினார். புதியமுறைகளைக் கையாளுவதால், தற்போதுள்ள மில்களிலேயே பச்சை, புழுங்கல் இரண்டிலுமே அதிகப்படியாக 4 1 சதவிகிதம் அரிசி கிடைக்கக்கூடுமென்று தெரிய வந்தது. அதிகப்படியாக கிடைக்கக்கூடிய அரிசியின் அளவு மிகச் சொற்பமாகவே தோன்றியபோதிலும், மொத்தம் 2 லட்சம் டன் அரிசி அதிகப்படியாகக் கிடைக்கக்கூடுமென்றும், இதன் மூலம் சுமார் 10 கோடி ரூபாய் இந்த மாகாணத்துக்கு மிச்சமாகும் என்றும் கூறப்படுகிறது.

தஞ்சாவூர் ஜில்லா கலெக்டரும், ஜில்லா சப்ளை அதிகாரியும் பிரபல அரிசி மில் சொந்தக்காரர்கள் பலரும், மி. வர்மா பரீட்சார்த்தமாக நெல் அறைத்துக்காட்டியதை நேரில் பார்த்தனர். புதிய முறைப்படி தீட்டப்பட்ட அரிசியின் தரம் மாகாண சர்க்கார் நிர்ணயித்துள்ள தரத்துக்குச் சமமாக இருப்பதைக் கண்டு அவர்கள் திருப்தியடைந்தனர்.

கட்டுப்பாடு செய்யப்படாத இரும்பு எஃகு சாமான் இறக்குமதி

கட்டுப்பாடு செய்யப்படாத இரும்பு எஃகு சாமான்கள் இறக்குமதி அனுமதிகள் வழங்குவது சம்பந்தமாக இதுவரை, கல்கத்தா, இரும்பு எஃகு கண்ட்ரோலர் எஃகு இறக்குமதி கண்ட்ரோலரால், கவனிக்கப்பட்டு வந்த எல்லா விண்ணப்பங்களும், 1950 ஜனவரி ஜூன் அமைதி கால ஆரம்பத்திலிருந்து கல்கத்தா டெபுடி பிரதம இறக்குமதிகள் கண்ட்ரோலரால் கவனிக்கப்பட வேண்டுமென்று இந்திய சர்க்கார் தீர்மானித்திருக்கின்றனர். ஆகவே, இறக்குமதியாளர்கள் தங்கள் விண்ணப்பங்களை இனிமேல், கல்கத்தாவிலுள்ள டெபுடி பிரதம இறக்குமதி கண்ட்ரோலருக்கே அனுப்பவேண்டும். 1950, ஜனவரி ஜூன் இறக்குமதி அனுமதிகள் வழங்குவது சம்பந்தமான பொதுக் கொள்கையை விளக்கி வர்த்தக மந்திரி காரியாலயம் தனியாக ஒரு அறிக்கை வெளியிட்டிருக்கிறது. இறக்குமதி வர்த்தகக் கட்டுப்பாடு ஷெட்யூலின் முதலாவது பாகத்தில் கூறப்பட்டுள்ள, அயக்கலப்பற்ற உலோகங்கள் இறக்குமதிக்கான அனுமதிகள். முன்போலவே புதுடில்லி, பிரதம இறக்குமதிக் கண்ட்ரோலராலேயே வழங்கப்பட்டு வரும்.

Printed & Published by T. M. Parthasarathy at the Mercantile Press, 2/45, Muthumari Chetty Street, Madras-1